தொழில் உரிமங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971-72-ல் மத்திய அரசு, தமிழ் நாட்டிற்கு வழங்கியுள்ள தொழில் உரிமங்கள் பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-72-ஆம் ஆண்டில், 53 தொழில் உரிமங்கள் மத்திய அரசால் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன.

THIRU M. RAJAH IYER : May I know how this number was in the previous years?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1967-ல் 17, 1971-ல் 53.

Cauvery Waters issue

* 261 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a three-member Official Committee has been constituted to collect all relevant data relating to the Cauvery Waters issue; and

(*b*) if so, the details thereof?

காவிரி நீர்த் தகராறு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காவிரி நீர்த் தகராறு தொடர்பான பொருத்தமான புள்ளிவிவரங் களைத் திரட்டுவதற்கு மூவரடங்கிய அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள் ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இது குறித்த விவரங்கள் அடங்கிய இந்திய அரசின் தீர்மானங் களின் நகல் @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.

@ 377-378ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 25]

திரு. ஜி. சுவாமிநாதன் : மத்திய அரசு ஒரு ஆய்வுக் குழு போட்டிருக் கிருர்கள். மாநில அரசும் ஒரு ஆய்வுக்குழு போட்டிருக்கிருர்கள். இவை களுக்கு இடையில் தொடர்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் கமிட்டிக்குத் தேவை யான புள்ளி விவரங்களைக் கொடுப்பதற்காக இங்கு ஒரு குழுவை அமைத்திருக் கிருர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மத்திய குழு ஜூலை மாதத்தில் நமது மாநிலத் திற்கு வந்ததாகத் தெரிகிறதே. அப்பொழுது மாநிலக்குழு ஏதேனும் குறிப்புகள் கொடுத்ததா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்தியக் குழு சென்னைக்கு வந்தது. அவர்கள் நடைமுறைக்குத் தேவையான விவரங்களைப் பற்றிப் பேசி ஞர்கள். மீண்டும் செப்டம்பர் மாதம் 9-தேதி அவர்கள் வருவதாக இருக் கிருர்கள்.

திரு. கே. ராஜாராம் : காவேரி வழக்கு வாபஸ் பெறப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாபஸ் பெறுவதற்கான முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நாம் வழக்கை திரும்பிப் பெறும் முயற்சியில் ஈடு பட்டிருக்கிருேம். ஆனுல் மைசூர் அரசு மேலும் அணைகள் கட்டிக் கொண் டிருக்கின்ருர்கள். டிசம்பர் மாதம் வரை அணைக்கட்டு வேலை நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு நல்ல முடிவுக்கு வரு வதற்காகக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது மேற்கொண்டு கேள்விகளைக் கேட்டு சிக்கலை உண்டாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

திரு. கே. ராஜாராம் : அமைச்சரின் வாக்குறுதிகளை வரவேற்கிறேன். தாமதம் அதிகமானுல், நாம்தான் பாதிக்கப்படுகிறவர்கள். ஆகவே தாமத மில்லாமல் ஒரு முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆறு மாதத்திற்குள் முடிவு செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் நல்ல முடிவைக் காண்போம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இது பற்றி எப்படி முடிவு எடுக்க வேண்டும் என்பதைப்பற்றி இங்கே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் அளித்த அபிப்பிராயத்தை இந்த அரசு பெற்று அந்த முடிவின் படி நடவடிக்கை எடுத்து வருகின்றது. மைசூரில் அணையைக் கட்டுகின்றார்கள் என்றால், அப்போது அதை ஒத்துக்கொண்டிருக்கின்றோம். அணையைக் கட்டினாலும், நமக்குக் கிடைத்து வருகின்ற தண்ணீர் குறைந்து விடக்கூடாது என்பதுதான் நம் வாதம். அதைத்தான் வலியுறுத்திக்கொண்டு வருகின்றோம். தாமதம் ஏற்பட்டால், மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களை இந்த அரசு அழைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்று ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி கூறுகின்றேன்.

Election of the Directors of the Ramanathapuram District Co-operative Central Bank.

* 262 Q.—THRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Presidents of the Co-operative Societies, whose loan instalments were outstanding for more than three months, have been elected as Directors of the Ramanathapuram District Co-operative Central Bank in the election held on 20th May 1971 and that the election officers have permitted the Presidents of those societies to vote at these elections; and

(*b*) if so, the action taken thereon by the Government?

இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கின் டைரக்டர்கள் தேர்தல்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கின் நிர்வாக சபைக்கு 20—5—1971-ல் நடைபெற்ற டைரக்டர்கள் தேர்தலில், 3 மாதங்களுக்கு மேல் பாங்க் கடன் தவணை கடந்த சங்கங்களின் தலைவர்கள், டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும், அத் தேர்தலில் அந்தச் சங்கங்களின் தலைவர்கள் வாக்களிக்க தேர்தல் அதிகாரிகள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?